



# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா!

## திராவிட மாடல் அரசு 90

பன்னீர் பெருமாள்

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என கழகத் தலைவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல், தமிழ்நாட்டின் பசுமைச் சூழலை அதிகப்படுத்த, பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

வனப்பரப்பை அதிகப்படுத்தும் நோக்கில், 2 கோடியே 80 லட்சம் மரக்கன்றுகளை நட்டு பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தைத் தொடங்கி வைத்தது முதற்கொண்டு, பள்ளிக்கரணையில் 2.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட 'சதுப்புநிலச் சூழலியல் பூங்கா', சென்னை, செனாய் நகரில் மெட்ரோ இரயில் கட்டுமானத்திற்குப் பின்னர், 18 கோடி ரூபாய் செலவில், மறுசீரமைக்கப்பட்ட 'திரு.வி.க. \பூங்கா', சென்னை, கிண்டியில் 30 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட கிண்டி 'சிறுவர் இயற்கைப் பூங்கா', திருவண்ணாமலையில் கலைஞர் நூற்றாண்டு 'தோட்டக் கலைப் பூங்கா' எனப் பல 'பசுமைப் பூங்காக்கள்' திறந்து வைத்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக, கோயம்புத்தூர், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான 'செம்மொழிப் பூங்கா', சென்னை - புழல், ரெட்டேரி மற்றும் கொளத்தூர் ஏரிக்கரை-களில் புதிய பூங்காக்கள் அமைத்து, ஏரிக்கரைகளை மேம்படுத்தும் பணிகள், ஏற்காடு மற்றும் மாதவரம் பூங்காக்களை தலா ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அங்கு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இவை மட்டுமின்றி, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகத் துறை, சுற்றுச்சூழல் துறை, தோட்டக்கலைத் துறைகளின் வாயிலாகவும் புதிய பூங்காக்களை உருவாக்குதல், பழைய பூங்காக்களைப் புனரமைத்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை, முதலவர் மு.க.ஸ்டாலின் தலைமயிலான திராவிட மாடல் அரசு செய்து வருகிறது.

இந்தப் பணிகளில் மிக முக்கியமாக, சென்னை மாநகரின் பசுமைப் பரப்பை அதிகப்படுத்த உருவாக்கப்பட்ட திட்டம்தான்





'கலைஞர் நூற்றாண்டுப் பசுமைப் பூங்கா' திட்டம்.

### கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா

முதலமைச்சர் அவர்கள் 15.08.2023 அன்று சுதந்திர தின விழாவில், தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில், தேசியக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றியபோது சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்கா (செங்காந்தள் பூங்கா)விற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில்'கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா' ஒன்று அமைக்கப்படும்" என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

அதன் தொடர்ச்சியாக, தமிழ் வளர்ச்சிக்கும், இலக்கியம், கலை, கலாச்சார வளர்ச்சிக்கும், அடித்தட்டு மக்களின் எழுச்சிக்கும் ஒரு நூற்றாண்டு வாழ்ந்து தமிழர்தம் வாழ்வில் நீங்கா இடம் பிடித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றும் விதமாக சென்னை, கோபாலபுரம், கதீட்ரல் சாலையில் செம்மொழிப் பூங்காவிற்கு எதிரில்,

**சென்னையின் வளர்ச்சிக்கும் உட்கட்டமைப்புக்கும் திட்டமிட்டு செயல்படும் அதே வேளையில் சென்னையின் பசுமைச் சூழலுக்கும் திட்டமிட்டுப் பணியாற்றுகிறது.**

கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு அரசால் மீட்கப்பட்டு தோட்டக்கலைத் துறைக்கு மாற்றப்பட்ட சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள நிலத்தில் உலகத்தரம் வாய்ந்த பூங்காவினை அமைத்திட, திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 27.02.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.



அதன்படி, பரந்து விரிந்த பசுமைச் சூழலில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் பல்வேறு வகையான அழகிய, அரியவகைத் தாவரங்கள் மற்றும் மரங்களைக் கொண்டதாக உலகத்தரத்துடன் அமைக்கப் பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டுப் பசுமைப் பூங்காவை முதலமைச்சர் அவர்கள், கடந்த சில நாட்களுக்கு முன், பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவில் 'உயர்தரத் தோட்டக்கலை அருங்காட்சியகம்', 'ஆர்க்கிட் குடில்', 'கண்ணாடி மாளிகை', 'அலங்கார வளைவு' 'பசுமைக் குகை', 'பறவையகம்', 'இசை நீரூற்று' போன்றவற்றை வடிவமைத்தவர்களுக்கு, முதலமைச்சர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தார்.

### பூங்காவின் சிறப்பம்சங்கள்

இயற்கை எழில்மிகுச் சூழலுடன் கூடிய இப்பூங்காவின் நுழைவாயில் அருகில், உயர்தரத் தோட்டக்கலை அருங்காட்சியகம், 500 மீட்டர் நீளமுடைய 'ஜிப் லைன்', பார்வையாளர்களைப் படம்பிடிக்கும் 'கலைஞர்களின் கலைக்கூடம்', 'தொடர் கொடி வளைவுப்பாதை', 120 அடி நீளமுடைய 'பனிமூட்டப் பாதை', 2,600 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள 'ஆர்க்கிட் குடில்', அரிய வகை மற்றும் கண்கவர் பூச்செடிகளால் காட்சிப்படுத்த 16 மீட்டர் உயரமுடைய 10,000 சதுர அடிப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள 'கண்ணாடி மாளிகை', அயல்நாட்டு பறவைகளைக் கொண்ட பறவையகம்,

23 அலங்கார வளைவுப் பசுமைக் குகை, சிற்றுண்டியகம், சூரியகாந்தி கூழாங்கல் பாதை, மர வீடு, அருவி, இசை நீரூற்று, குழந்தைகள் விளையாடும் இடம், பசுமை நிழற் கூடாரம் பாரம்பரிய காய்கறித் தோட்டம் ஆகிய சிறப்பு அம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. இப்பூங்காவில் உள்ள சுவர்களில் தீட்டப்பட்டுள்ள சுவரோவியங்கள், பூங்காவை மேலும் அழகுபடுத்துகின்றன.

சென்னை பெருநகரத்தைப் பொறுத்தவரை, அண்ணா மேம்பாலம் முதல் மெட்ரோ வரை ஒவ்வொரு வளர்ச்சியும் முத்தமிழறிஞர் கலைஞரால் உருவாக்கப்பட்டது என்றால் மிகையில்லை.

அவரின் தொடர்ச்சியாகச் செயல்படும், திராவிட மாடல் ஆட்சி சென்னையின் வளர்ச்சிக்கும் உட்கட்டமைப்புக்கும் திட்டமிட்டு செயல்படும் அதே வேளையில் சென்னையின் பசுமைச் சூழலுக்கும் திட்டமிட்டுப் பணியாற்றுகிறது.

...சாதனை தொடரும்

## மக்களை அச்சப்படுத்தும் ரயில்வே!

இந்தியாவின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக, ரயில் விபத்துகள் நடப்பது மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. சிக்னல் கோளாறு சார்ந்த விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில், அவற்றைச் சரிசெய்வதற்கான நடவடிக்கை என்று எதையும் ஒன்றிய அரசு எடுத்ததாகச் செய்திகள் இல்லை.

சீனா, கடந்த 15 ஆண்டுகளில் 42 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்துக்கு புல்லட் ரயில் பாதையை உருவாக்கியுள்ளது என்கின்றன புள்ளிவிவரங்கள். ஆனால், இந்தியாவில் மொத்த ரயில்வே இருப்புப் பாதை நீளம் 62,000 சொச்சம் கிலோ மீட்டர்தான்

ரயில் போக்குவரத்திற்கான தேவை பல மடங்கு கூடியிருக்கும் நிலையில், அதனை ஈடுகட்டுவதற்கான வேலையை, கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசு முனைப்பு காட்டி செய்யவே இல்லை. பத்து சதவிகித மேம்பாடுகூட நடக்கவில்லை என்கின்றனர்.

ரயில்வே பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு சார்ந்த பணிகளில் லட்சக்கணக்கான பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இருப்புப் பாதைகள் தாங்கும் திறனைத் தாண்டி, ரயில் போக்குவரத்தைக் கையாளுகின்றன.

மேம்படுத்தப்படாத ரயில் பாதைகளிலேயே, 'வந்தே பாரத்' அதிவேக ரயில் இயக்கப்படுகிறது. இந்தச் சூழல் ரயில் பயணங்கள் பாதுகாப்பு இல்லாத ஒன்றாக மாற்றுவதைத் தவிர்க்க முடியாது.

நாள் ஒன்றுக்கு இரண்டரை கோடி பயணிகளைக் கையாளும் ரயில்வே துறையை நவீனப்படுத்துவதும் போதுமான எண்ணிக்கையில் பணியாளர்கள் நியமிக்க வேண்டியதும் காலத்தின் கட்டாயமாக உள்ளது .

ரயில் நிலையங்களுக்கு காவி வண்ணம் பூசுவது, நடைபாதைகளைப் பளபளப்பாக்குவது ஆகியவற்றால் மட்டுமே மக்களை நம்ப வைக்க முடியாது.

## :ப்ளாஷ்பேக்



### வாய்ப்புக் கேட்டு சந்திப்பு!



ச.கரிகாலன்

2006-ஆம் ஆண்டு கழகப் பொதுக்குழு உறுப்பினராக இருந்த என்னுடைய தந்தை கோ.சக்திவேல், கழக நிர்வாகிகளுடன் தலைவர் கலைஞர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்தார். அந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வாய்ப்புக் கேட்டு இந்தச் சந்திப்பு நடைபெற்றது. உடன் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ராமமூர்த்தி மற்றும் அன்றைய மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர் அண்ணாதுரை ஆகியோர் உடன் உள்ளனர்.

**– ச.கரிகாலன், திருவோணம் ஒன்றியம், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சாதி உணர்ச்சியை நீக்க சட்டம்!

1958-ஆம் ஆண்டு, மே மாதம் 10 மற்றும் 11 தேதிகளில், திருவாரூரில் நடைபெற்ற தஞ்சை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்களில் ஒன்று, "சாதி உணர்ச்சியைக் களைய சட்டம் வேண்டும்" என்பது. அடுத்த குடிமதிப்புக் கணக்கு எடுக்கும்போது சாதிப் பெயர்களை இணைப்பதில்லை எனத் திட்டமிடவேண்டும். சாதிப்பெயர்களை பொது இடங்கள், தெருக்கள், விடுதிகளில் இருந்து நீக்குவதன் மூலம், சாதி உணர்ச்சியை நீக்க வேண்டுமென்றும், அதற்கான சட்டம் இயற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

629

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131